Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-10-01 5:54 PM Page 1






35ஆவது ஆண்டில் கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்
VLAMBARAM

email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நிதி: 35 பாலம்: 19 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் OCTOBER 01, 2025

# பாலஸ்தீனத்தை ஒரு நாடாக கனடா அங்கீகரித்தது

கனடியப் பிரதமர் மார்க் காணி பாலஸ்தீனத்தை ஒரு நாடாக கனடா அங்கீகரிக்கிறது என 2025 செப்ரெம்பர் 21ஆம் திகதி அறிவித்தார். கனடியப் பிரதமர் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், “1947ஆம் ஆண்டில் இருந்தே மத்திய கிழக்குப் பிரதேசத்தில் நீடித்த அமைதி நிலவுவதற்காக அங்கு இருநாடுகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற தீர்வை ஆதரிப்பது ஒவ்வொரு கனடிய அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. இக்கொள்கை, மத்திய கிழக்குப் பிரதேசத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை ஏற்படுத்த இஸ்ரேல் அரசுடன் இணைந்து ஓர் இறையாண்மையுடன்கூடிய ஜனநாயகமான பாலஸ்தீன அரசை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

பல தசாப்தங்களாக இந்தக் குறிக்கோளை அடைவதற்கான கனடாவின் உறுதிப்பாடு பேச்சுவார்த்தை மூலம் அடையப்படும் என்ற எதிர்பார்ப்பில் அமைந்திருந்தது. துரதிர்ஷ்டவசமாக இந்த சாத்தியக்கூறு படிப்படியாகவும், தீவிரமாகவும் குறைந்து வருகிறது. இதற்கு பல காரணங்கள் அமைகிறது.

இஸ்ரேலின் இருப்பு உரிமையையும் இரண்டு நாடுகள் என்ற தீர்வையும் ஹமாஸ் நீண்டகாலமாகத் தீவிரமாக நிராகரித்து வருகிறது. இதன் உச்சக் கட்டமாக இஸ்ரேலுக்கும் அதன் மக்களுக்கும் எதிராக ஹமாஸ் 2023 ஒக்ரோபர் 7ஆம் திகதி நடத்திய கொடூரமான பயங்கரவாத தாக்குதல் அமைந்தது.

ஜோடன் (Jordan) ஆற்றின் மேற்குக் கரைப்பிரதேசத்திலும் கிழக்கு ஜெருசலேம் (Jerusalem) பிரதேசம் முழுவதிலும் இஸ்ரேலிய அரசு தனது மக்களை வலிந்து குடியேற்றுவதை துரிதப்படுத்துகிறது. அத்துடன் அங்கு குடியேற்றப்பட்டவர்களது வன்முறை தற்போது பாலஸ்தீனர்களுக்கு எதிராக அதிகரித்துள்ளது.

உணவு மற்றும் பிற அத்தியாவசிய மனிதாபிமானப் பொருட்கள் காசா பகுதியில் (Gaza) வாழும் மக்களுக்குச் சென்றடைவதைத் தடுப்பதன்மூலம் காசாவில் மனிதப் பேரழிவுக்கு இஸ்ரேலிய அரசு வழிவகுக்கிறது.

ஹமாஸ் இஸ்ரேல் மக்களைப் பயமுறுத்தியும் காசா மக்களை ஒடுக்கியும் பயங்கரமான துன்பங்களை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஹமாஸ் அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிப்பதுடன், முழுமையாக நிராயுதபாணிகளாகுவதும் மற்றும் எதிர்கால பாலஸ்தீன நிர்வாகத்தில் எந்தப் பங்கையும் வகிக்காமல் இருப்பதும்


Prime Minister Mark Carney, at the United Nations General Assembly

கட்டாயமாகும். ஹமாஸ் பாலஸ்தீன மக்களிடமிருந்து வாழ்க்கையை ஏமாற்றி சுதந்திரத்தைத் திருடியுள்ளது. இதனால் அவர்களால் பாலஸ்தீன மக்களின் எதிர்காலத்தை எந்த வகையிலும் ஆணையிட்டு நடத்த முடியாது.

தற்போதைய இஸ்ரேலிய அரசாங்கம் பாலஸ்தீன நாடு என்ற வாய்ப்பு உருவாக்கப்படுவதைத் தடுக்க முறையாகச் செயற்பட்டு வருகிறது. சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டவிரோதமான மேற்குக் கரையில் (ஜோடன் ஆற்றின்) குடியேற்ற விரிவாக்கக் கொள்கையை அது இடைவிடாமல் பின்பற்றி வருகிறது. காசாவில் அதன் தொடர்ச்சியான தாக்குதல் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்றுள்ளது. ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களை இடம்பெயரப் பண்ணியுள்ளது. மேலும் சர்வதேச சட்டத்தை மீறும் ஒரு பேரழிவு தரக்கூடியதுமான மற்றும் தடுக்கக்கூடியதுமான பஞ்சத்தை ஏற்படுத்தியுள்ளது. பாலஸ்தீன நாடு என்று ஒன்று ஒருபோதும் இருக்காது என்பது தற்போதைய இஸ்ரேலிய அரசாங்கத்தின் உறுதியான கொள்கை ஆகும்.

இந்தச் சூழலில்தான், கனடா பாலஸ்தீன நாட்டை அங்கீகரித்து பாலஸ்தீன மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையே அமைதியான மற்றும் சமாதானமான எதிர்காலத்திற்கான வாக்குறுதியை வழங்குகிறது. இருநாடுகள் என்ற தீர்வை உருவாக்குவதற்கான சர்வதேச நாடுகளின் முயற்சியின் ஒரு பகுதியாக கனடா இதைச் செய்கிறது.

இவ்வாறு பாலஸ்தீனத்தை ஒரு நாடாக கனடா அங்கீகரிப்பதால், எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்ற மாயைக்குள் கனடா இருக்காவிட்டாலும், இவ்வாறு அங்கீகரிப்பது ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் பிரதிபலிக்கும் சுயநிர்ணயக் கொள்கைகள், அடிப்படை மனித உரிமைகள் மற்றும் தலைமுறையாக கனடா கடைப்பிடித்துவரும் நிலையான கொள்கையுடன் உறுதியாக இணைக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீன அதிகாரசபையின் (Palestinian Authority) தலைமையிலான பாலஸ்தீன நாட்டின் அரசை அங்கீகரிப்பது, அமைதியாக இருநாட்டு மக்களும் வாழ்வதை விரும்புவோருக்கும் ஹமாஸ் தீவிரவாதிகளின் முடிவை விரும்புவோருக்கும் அதிகாரம் அளிக்கிறது. இந்த அங்கீகாரம் எந்தவகையிலும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவது இல்லை. அதற்கான வெகுமதியும் அல்ல. மேலும், இஸ்ரேல் அரசிற்கும் அதன் மக்கள் மற்றும் அவர்களின் பாதுகாப்புக்கான கனடாவின் உறுதியான ஆதரவை பாலஸ்தீன நாட்டிற்கான அங்கீகாரம் எந்தவகையிலும் சமரசம் செய்யாது. ஒரு உறுதியான நிலையான இருநாடுகள் என்ற தீர்வை அடைவதன்மூலம் மட்டுமே ஒரு நிலையான பாதுகாப்பும் சமாதானமும் இவ்விரு நாடுகளுக்கும் மத்திய கிழக்குப் பிரதேசத்திற்கும் கிடைக்கும்.

பாலஸ்தீன அதிகாரசபை கனடாவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் மிகவும் தேவையான சீர்திருத்தங்கள் குறித்து நேரடி உறுதிமொழிகளை வழங்கியுள்ளது. இதில் அதன் நிர்வாகத்தை அடிப்படையில் சீர்திருத்துவது, (Fundamentally reform its governance) 2026ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலை நடத்துவது, அத் தேர்தலில் ஹமாஸ் எந்தப் பங்கையும் வகிக்க முடியாமல் செய்வது, பாலஸ்தீன அரசின் இராணுவமயமாக்கலை இல்லாமல் செய்வது என்பன அடங்கும்.

பாலஸ்தீன அதிகாரசபை இந்தச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த கனடா ஆதரிப்பதுடன் அவற்றை நடைமுறைப்படுத்த தீவிர முயற்சிகளை கனடா எடுக்கும். சர்வதேச நாடுகளுடன் கனடா பாலஸ்தீனத்தில் நம்பகமான அமைதித் திட்டம், ஜனநாயக நிர்வாகம், பாலஸ்தீன நாட்டிற்கான தெளிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் காசா முழுவதும் மனிதாபிமான உதவிகளை நிலையான பெரிய அளவில் வழங்குவது போன்றவற்றில் ஒத்துழைப்பு வழங்குவதில் ஏற்கனவே முன்னேற்றம் கண்டுள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80ஆவது பொது விவாதக் கூட்டத்தொடர் செப்ரெம்பர் 23ஆம் திகதி ஆரம்பமானது. இக்கூட்டத்தொடரை ஒட்டி பல நாடுகள் பாலஸ்தீன நாடு ஒன்று உருவாகுவதற்கான தமது ஆதரவுகளைத் தெரிவித்து வந்தன.

ஏற்கனவே பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரித்துள்ள பெரும்பான்மையான ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பின நாடுகளுடன் தற்போது கனடா, அவுஸ்ரேலியா, போர்த்துக்கல், இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளும் இணைந்துள்ளன.

இதுவரை ஐக்கிய நாடுகள் சபையின் 193 நாடுகளில் கனடா உட்பட 157 நாடுகள் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரித்துள்ளன.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்









# House for Sale / Lease / Condo / BSMT

## Condo for Lease (Brand NewCondo)

* North East view
* 2 Bed Room
* 2 Washroom
* 2 years New Luxury condo
* Huge Balcony
* 1 Parking
* Easy Access to Hwy, TTC, Schools Amenities

(Kennedy / Highway 401)

**Available Nov. 01/2025**

George Paranthaman **
Call : 416 277 9044

## Condo for Sale

- 1 Bed Room + DEN
- 1 Full Washroom
- 1 Parking
- 686 Sq. Ft.

+ 74 Sq. Ft. terrace

Walking Distance to Subway

Don Mills / Eglinch

Vishal **
Call : 416 629 1973

## Detached Home for Sale

3 Bed Room Renovated
(West Rouge Neighbour hood - Toronto)

Walk to Beach....
Go Station
and TTC
Please Call.......

Amal Joseph *
Call : 416 300 8294

## Commercial Space for Lease

417 Sq. Feet

Office Space

GTA Square

2nd Floor

George P *
Call : 416 277 7054

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

* Sales Rep.
** Broker

**Tel: 416-321-6969**

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# ஓர் ஆண்டு நிறைவில் அனுர அரசாங்கம்

## – அரவின் –

அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்று, ஒரு வருடம் நிறைவு பெற்றுள்ள போதும், அதனைக் கொண்டாடுகின்ற நிகழ்வுகள் எதுவும் இடம்பெறவில்லை.

அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம்.

கொண்டாட்டங்களை நடத்தி செலவு களை செய்வது அரசாங்கத்தின்மீது விமர்சனங்களை ஏற்படுத்தும் என்பது முதலாவது. ஏற்கனவே கடந்த அரசாங்கங்கள்மீது குற்றம் சாட்டியவர்கள் தற்போது ஆட்சிக்கு வந்தவுடன் ஆடம்பரமாக வீண் செலவு செய்கின்றனர் என்ற குற்றச் சாட்டை மக்கள் சுமத்துவார்கள் என்பதால் அதனைத் தவிர்த்து இருக்கலாம்.

இரண்டாவது, முதலாம் ஆண்டு நிறை வைக் கொண்டாடக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை. ஏனென்றால் அரசாங்கம் மிகப்பெரிய வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்தே ஆட்சிக்கு வந்தது. 245 பக்கங்களில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருந்தது தேசிய மக்கள் சக்தி. அந்தத் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்த முக்கியமான வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. அவற்றின் அருகில்கூட அரசாங்கம் செல்லவில்லை.

ஆனால் அரசாங்கம் ஐந்தில் ஒரு பகுதி ஆட்சிக் காலத்தை முடித்து விட்டது. அனுரகுமார திசாநாயக்கவுக்கு இன்னும் நான்கு ஆண்டுகள்தான் இருக்கின்றன. அதற்குள் அவர் எஞ்சிய வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றப் போகிறார் என்ற கேள்வி மக்களுக்கு ஏற்பட்டு விட்டது.

அவரது ஓராண்டு பதவிக் காலத்தில் மக்களின் வாழ்க்கை நிலை, அவர்கள் எதிர்பார்த்தளவுக்கு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. மக்களின் சிரமங்களையும் அரசாங்கத்தினால் குறைக்க முடியவில்லை.

வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த முடியவில்லை. இது ஒரு முக்கியமான தோல்வி.



கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் அரச தரப்பைப் பார்த்து, "யாழ். மாவட்டத்தில் ஏதாவது அபிவிருத்தித் திட்டம் செய்திருக்கிறீர்கள் என ஒன்றைக் கூற முடியுமா?" எனக் கேட்டார்.

அதற்கு அரச தரப்பினால் பதிலளிக்க முடியவில்லை. திரும்பத் திரும்ப கேள்வி கேட்டபோது அவைமுதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க அளித்த பதில், பைத்தியங்களுக்கெல்லாம் பதிலளித்துக் கொண்டிருக்க முடியாது" என்பதுதான்.

அரசாங்கம் எதையாவது செய்யவில்லை என்பதே அதன் அர்த்தம். அதனால்தான் அவர்களால் எதையும் கூற முடியவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட கோட்டின் வழியாகவே இந்த அரசாங்கம் பயணம் செய்கிறது என்பதுதான் உண்மை.

அந்தக் கோடு நிரந்தரமானது அல்ல, அந்தக் கோட்டின் வழியான பயணம் நீண்ட நாளைக்குத் தாக்குபிடிக்கக் கூடியதும் அல்ல.

அரசாங்கம் தனக்கான ஒரு பாதையை வகுத்துக் கொள்ள வேண்டும், அது இன்னமும் நடக்கவில்லை. இதுதான் மிகப் பிரதானமான பிரச்சினை.

பொருளாதாரச் செழிப்பை ஏற்படுத்துவ தாகக் கொடுத்த வாக்குறுதி மிக மோசமான நிலையிலேயே இருக்கிறது.

அரசாங்கம் கூறுகின்ற புள்ளிவிபரங் களைத் தாண்டி மக்களுக்கு நேரடியாக நன்மைகள் கிடைக்கவில்லை.

இது தவிர இன்னும் அரசியலமைப்பை மாற்றுதல், பொருட்களின் விலைகளைக் குறைத்தல், பொருளாதாரச் செழிப்பை ஏற்படுத்துதல், நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தல் என்று ஏகப்பட்ட வாக்குறுதிகள் இருக்கின்றன. அவையெதுவுமே, செயல் வடிவம் பெறவில்லை.

இந்தச் சிக்கலைத் தீர்க்காமல் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனால் அரசாங்கம் கொண்டாட்டங்கள் நடத்து வதைத் தவிர்த்துக் கொண்டிருக்கலாம்.

எவ்வாறாயினும் அனுரகுமார திசாநாயக்க வின் அரசாங்கத்துக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை அது சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதே உண்மை.

ஏனென்றால், இந்த அரசாங்கம் மிகப்பெரிய எதிர்பார்ப்புகளுடன் ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. மக்கள் மிகமிக நொந்துபோன நிலையில், ஒரு மாற்று அரசியல் தலைமைத்துவம் தேவை என்ற அடிப்படையில், இந்த அரசாங்கத்தைக் கொண்டு வந்திருந்தனர்.

ஆனால் இந்த அரசாங்கம் அந்த நம்பிக்கையைக் காப்பாற்றும் விதத்தில் நடந்து கொள்கிறதா என்பது மிகப் பெரிய கேள்வியாக இருக்கிறது.

இப்பொழுது இலங்கையில் கொலைகள் மிகத் தாராளமாக நடந்து வருகின்றன. சட்டம் ஒழுங்கு பற்றி கேள்வி கேட்க முடியாத அளவுக்கு கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன.

இது பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான பழி தீர்க்கும் சம்பவங்கள் எனக் கூறி இந்தக் கொலைகளை அரசாங்கம் மிகச் சுலபமாகக் கடந்து செல்கிறது. இதற்கும் தேசிய பாதுகாப்பிற்கும் தொடர்பு இல்லை எனத் தட்டிக் கழிக்கிறது.

ஓர் அரசாங்கத்தினால் பாதாள உலகக் குழுக்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாமல் போனால், அது தேசிய பாதுகாப்புக்கான பிரச்சினையே. அதனைப் புரிந்துகொள்ளாத வகையில் இந்த அரசாங்கம் செயற்படுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர், கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 323 கொள்கலன்கள் எந்தவித சோதனை யும் இல்லாமல் விடுவிக்கப்பட்டன. சிவப்பு முத்திரையிடப்பட்டு, சுங்கத்துறை திணைக்களத்தினால் அவை தடுத்து வைக்கப்பட்டிருந்தன. அவை சோதனை இடப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட வேண்டுமெனத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், எந்தச் சோதனையும் இல்லாமல் தற்போதைய அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்டது.

அதற்குப் பின்னால் அமைச்சர் வசந்த சமரசிங்க, பிமல் ரத்னநாயக்க போன்றோர் இருந்ததாக குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருந்தன. ஆனால் அவர்கள் அதனை மறுத்திருந்தனர். எல்லாம் சரியான முறையிலேயே விடுவிக்கப்பட்ட தாகக் கூறினர்.

இந்த விவகாரம் இறுகியதும் விசாரணை நடத்த உத்தரவிட்டனர். எல்லாம் சரியாக இடம்பெற்றிருந்தால் எதற்கு விசாரணை?

இப்போது, ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் கொள்கலன்கள்மூலம் தங்காலையில் கொண்டு வந்து பதுக்கப் பட்டு இருந்தது கண்டறியப்பட்டிருக்கிறது. இவை எப்படி நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன? இதற்கு அரசாங்கம் சரியான பதிலைக் கூறவில்லை.

அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில்தான் இந்தப் போதைப் பொருட்கள் கொண்டு வரப்பட்டதாக எதிர்க்கட்சி குற்றம்சாட்டுகின்றன. இது அரசாங்கத்துக்கு சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது.

இன்னொரு பக்கம் தற்போதைய அரசாங்கத்தைச் சேர்ந்த ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களின் சொத்துகள் தொடர்பான விபரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டன.

இவை மக்கள் மத்தியில் அதிகம் பேசுபொருளாக மாறியிருக்கிறது.

ஏனென்றால் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு, 5 கோடி ரூபாவுக்கு அதிகமான சொத்துக்கள் இருக்கின்றன.

பிரதமரான ஹரிணி அமரசூரியவுக்கு இரண்டரை கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக்கள் இருப்பதாக கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது.

அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு 27 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக்கள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

எல்லா அமைச்சர்களும் இப்பொழுது கோடீஸ்வரர்களாகவே இருக்கின்றனர்.

ஆனால் இவர்கள் சாமானியர்களாகத் தங்களை காட்டிக்கொண்டு ஆட்சிக்கு வந்தார்கள்.

சாதாரண குடிமகன் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக வந்திருப்பதாக பிரசாரம் செய்திருந்தனர், ஆனால் அவரோ கோடீஸ்வரராக இருந்திருக்கிறார் என்பது இப்போதுதான் மக்களுக்குத் தெரிய வந்திருக்கிறது.

இதேபோன்றுதான், அரசாங்கத்தின் அமைச்சர்கள் அனைவருமே செழிப்பான வர்களாக இருக்கிறார்கள் என்பதை அவர்கள் வெளிப்படுத்தி இருக்கின்ற சொத்துக்கள் காட்டுகின்றன.

முந்தைய ஆட்சியில் இருந்தவர்கள் பெரும் ஊழல் செய்திருப்பதாக, மோசடி செய்திருப்பதாக குற்றம் சாட்டியவர்கள், அவர்களைத் திருடர்கள் என்று கூறியவர்கள், அவர்களைவிட அதிகம் சொத்துகளை வைத்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front  2025-10-01  5:54 PM  Page 5



# பாலஸ்தீனத்தை ....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

“மத்திய கிழக்கில் அதிகரித்துவரும் பயங்கரவாதக் கொடுமைகளை எதிர் கொண்டு அங்கு இருநாடுகள் உருவாகும் சாத்தியத்தை உறுதி செய்ய நாங்கள் செயல்படுகிறோம். அதாவது ஒரு பாதுகாப்பான மற்றும் உறுதியான இஸ்ரேல் மற்றும் ஒரு சாத்தியமான பாதுகாப்பான சுதந்திர பாலஸ்தீன நாடு இருக்க வேண்டும். இந்த நேரத்தில் இவை இரண்டுமே எங்களிடம் இல்லை” என்று இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டாமர் (Keir Starmer) வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


Benjamin Netanyahu, Prime Minister of the State of Israel
Thanks: UN Photo

பல நாடுகளின் பாலஸ்தீன நாட்டிற்கான அங்கீகரிப்பை இஸ்ரேல் உடனடியாகக் கண்டித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேலிய தூதுவர் டனி டானன் (Danny Danon) இந்த அங்கீகாரங்களை ‘வெற்று அறிவிப்புகள்’ (Empty Declarations) என்று அழைத்துள்ளார். இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு (Benjamin Netanyahu) இவ்வாறு நாடுகள் அறிவிப்பது பயங்கரவாதத்திற்கு மிகப் பெரிய வெகுமதியை வழங்குகிறது என்று கூறியுள்ளார். இஸ்ரேலியப் பிரதமர் மேலும் தெரிவிக்கையில், “ஜோடன் நதிக்கு மேற்குக்கரையில் ஒரு பாலஸ்தீன நாடு ஒருபோதும் நிறுவப்பட மாட்டாது. அவ்வாறு நடப்பதை இஸ்ரேல் ஒருபோதும் அனுமதிக்காது” என்றார்.

இராஜதந்திர ரீதியாக பாலஸ்தீனத்தை


Mark Carney, Prime Minister of Canada
Thanks: UN Photo/Loey Felipe

ஒரு நாடாக அங்கீகரிப்பது ஒரு பெரிய முன்னேற்றம் ஆகும். ஆனால், நடைமுறையில் இவ்வாறு பல நாடுகள் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீ கரிப்பதால் அது பாலஸ்தீனத்தை ஒரு நாடாக்குவதில் எந்தச் சாத்தியக் கூறுகளையும் செய்யாது.

ஒரு நாட்டை வரையறுப்பது எது என CBC ஊடகம் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த ஹமில்டனில் உள்ள மக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் கத்தரின் ஃப்ரோஸ்ட் (Catherine Frost), “ஒரு நாட்டை வரையறுப்பதற்கான பதில் எளிதானது அல்ல” என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், “நாடுகளுக் குரிய வரைவிலக்கணம் வியக்கத்தக்க வகையில் ஒரு வரையறைக்குள் இருக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் 1933ஆண்டில் நடத்தப்பட்ட மாண்டிவீடியோ மாநாடு (Montevideo Convention) ஒரு நாட்டிற்கு உரிய உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து தெரிவித்துள்ளது. அதன்படி ஒரு நாடு என்ற அந்தஸ்திற்கு நான்கு அளவு கோல்களை அம்மாநாடு வகுத்திருந்தது.

அவையாவன: நிரந்தர மக்கள் தொகை இருக்கவேண்டும், வரையறுக்கப்பட்ட பிரதேசம் இருக்க வேண்டும், ஓர் அரசாங்கம் இருக்க வேண்டும், அந்த அரசாங்கத்திற்கு மற்றைய நாடுகளின் அரசாங்கங்களுடன் ஈடுபடும் திறன் இருக்க வேண்டும்” என்றார்.

பாலஸ்தீன பிரதேசங்களின் நிலை 1933ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் நிர்ணயிக்கப்பட்ட நாட்டிற்கான அனுமதி கொடுக்ககூடிய அளவுகோல்களைப் பூர்த்தி செய்கிறதா என்ற கேள்வியை சர்வதேச உறவு நிபுணர்களிடம் (International Relations Experts) எழுப்பியுள்ளது.

பாலஸ்தீனப் பிரதேசத்தின் எல்லைகள் தற்போது சர்ச்சைக்குரியவையாக இருக்கின்றன. எந்த ஓர் அரசாங்க நிறுவனமும் பாலஸ்தீன நாட்டை உள்ளடக்கும் முக்கிய பிரதேசங்களை தற்போது மேற்பார்வையிடவோ அல்லது கட்டுப்படுத்தவோ இல்லை.

என்றாலும் பாலஸ்தீன நாடு என்று கருத அது நிரந்தரமான மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. பாலஸ்தீன நாட்டின் எல்லைகள் சர்ச்சைக்குரியவையாக இருந்தாலும், அதன் எல்லைகள் பெரும்பாலும் ஜோடன் ஆற்றின் மேற்குக்கரை, காசாப் பகுதி மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றன.



Mahmoud Abbas, President of the State of Palestine
Thanks: UN Photo

மஹ்மூத் அப்பாஸ் (Mahmood Abbas) பாலஸ்தீனத்தின் அதிபராக இருந்தாலும் அவர் தலைமையிலான பாலஸ்தீன அதிகாரசபை ஜோடன் ஆற்றின் மேற்குக்கரையில் வரையறுக்கப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. இந்த மேற்குக்கரையும் கிழக்கு ஜெருசலேமும் இஸ்ரேலிய இராணுவத் தால் ஆக்கிரமிக்கப்பட்டு இஸ்ரேலிய கட்டுப்பாட்டின்கீழ் தற்போது உள்ளது.

2005ஆம் ஆண்டில் இஸ்ரேல் காசாவில் இருந்து வெளியேறியபோது பாலஸ்தீன அதிகாரசபையே காசாவை நிர்வகித்தது. பின்னர் இரண்டு ஆண்டுகளில் பாலஸ்தீன அதிகாரசபையை காசாவில் இருந்து வெளியேற்றி ஹமாஸ் காசாவை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது.

இப்போது காசா ஒரு போர் மண்டலமாகவும், இஸ்ரேலியப் படை களால் ஆக்கிரமிக்கப்பட்டதாகவும் இருக்கிறது. தற்போதைய போருக்கு பிந்தைய சூழ்நிலையில் யார் காசாப் பகுதியை மேற்பார்வையிடுவார்கள் என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது.

“சர்ச்சைக்குரிய எல்லைகள் ஒரு நாட்டை அங்கீகரிக்கத் தடையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் புதிய உறுப்பினரான தெற்கு சூடான், அதன் எல்லைகள் வரையறுக்கப்படாத நிலையிலேயே 2011ஆம் ஆண்டு ஒரு நாடாக ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. உண்மையில் தெற்கு சூடானுக்கும், சூடானுக்கும் இடையே இன்னமும் எல்லை நிர்ணயிக்கப்பட வில்லை. எல்லைத் தகராறுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இந்த அளவுகோல்கள் அனைத்தும் பார்ப்பவரின் பார்வையில்தான் உள்ளன” என பேராசிரியர் கத்தரின் ஃப்ரோஸ்ட் தெரிவித்தார்.


United Nations Secretary-General António Guterres
Thanks: UN Photo

ஐ.நா. பொதுச்சபையின் எண்பதாவது அமர்வின் பொது விவாதத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அண்டனியோ குட்ரஸ் (Antonio Guterres) செப்ரெம்பர் 2023இல் ஆரம்பித்து வைத்தார். இந்த 80ஆவது அமர்வின் பொது விவாதத்திற்கு Annalena Baerbock தலைமை


Her Excellency Annalena Baerbock, President of the 80th session of the United Nations General Assembly.
Thanks: UN Photo/Manuel Elías.

தாங்கினார். அமெரிக்கா வர விசா அனுமதி வழங்கப்படாததால் பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் நேரலையில் கலந்துகொண்டு இவ்விவாதத்தில் உரையாற்றினார்.



## மனதின் அலைகள் சுவாசத்தில் படரும்

மனதின் அலைகள் சுவாசத்தில் படரும்

மூச்சுக்காற்றும் இனி அடையாளம் காட்டும்
உள் வாங்கிய காற்றில் தனித்தன்மை வெளிப்படும்
கைரேகை விழித்திரை போல் மாறுபடும் சுவாசமும்
இனி எங்கே சென்றாலும் நீ யார் என சொல்லும்.

குற்றவாளியை தடம் காட்டும் அவன் சுவாசம்
ரகசிய குறியீடாய் பேசும் அவன் மூச்சு
கண்களுக்குத் தெரியாமல் காற்றினில் கலந்து
அவன் வாழ்வின் மர்மங்களை அது சாற்றும்.

மூச்சில் வெளிவரும் உடலின் ரகசியம்
நோய் நொடிகளும் மருந்துகளின் வீரியமும்
மகிழ்ச்சி துயரம் கோபம் எல்லாமும்
மனதின் அலைகள் சுவாசத்தில் படரும்

விரல்ரேகை, விழித்திரை அடையாளம் காட்டும் உலகில்
மூச்சுக்காற்றும் இனி அடையாளம் காட்டும்
வாழும் மனிதர்களில் குற்றவாளி யார்
என்பதை சொல்ல அது முக்கிய பங்காற்றும்



யாருக்கும் பொருந்தாத தனித்துவமான சுவாசமுறை
ஒவ்வொரு மனிதனுக்கும் – தடயவியல் நிபுணர்களுக்கோர்
வியத்தகு வரப்பிரசாதம் என்றிடும் அறிவியல் இதழ்
அமெரிக்காவிலிருந்து வெளியாகும் “கரன்ட் பயாலஜி”

எவரதும் எண்ணத்தை பிரதிபலிக்கும் சுவாசம்
அதுவோ என்றும் மூளையின் வாசிப்பு
விஞ்ஞானிகளின் விந்தையான கண்டுபிடிப்பு
இந்தப் புது யுகத்தின் புதுத் துவக்கம்

- பாஞ்சாலன் -

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340 .9490 / 416.732.2228

Mr.S.F.Xavier
(Teacher)

Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-10-01 5:54 PM Page 6



# மாகாணசபை முதல்வர் பதவிக்கு சுமந்திரன்?

– முகிலன் –

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், எம்.ஏ.சுமந்திரன் அடைந்த தோல்வி, அவரை மற்றொரு வெற்றிக்காக வேகமாகச் செயற்படத் தூண்டியிருக்கிறது.

அவர் இப்போது அதற்காக, தன்னைத் தயார்படுத்த ஆரம்பித்திருக்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தலில் அவர் கடுமையான சவாலை எதிர்கொள்ள நேரிட்டது.

தமிழ் அரசுக் கட்சி மீதான கடுமையான விமர்சனங்கள் அந்தக் கட்சியின் வாக்கு வங்கியை யாழ்ப்பாணத்தில் கணிசமாகக் குறைத்துவிட்டது.

அது சுமந்திரனுக்கு பாதகமாக அமைந்தது. ஏனென்றால் அது ஆசனங் களை மட்டுப்படுத்தியது. சுமந்திரன் இவ்வாறான சூழலை எதிர்பார்த்திருந்தார். ஆனால் இந்தளவுக்கு மட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கவில்லை.

அதனால் அவர், தன்னை மேவி வாக்கு களை பெறக்கூடியவர்கள் யாரையும் புதிதாக வேட்பாளராக நிறுத்தவில்லை.

சிறிதரனின் வாக்கு வங்கி நிலையானது என்பது அவருக்குத் தெரியும். அவருடன் போட்டி போட முடியாது என்பதும் தெரியும். சிறிதரனுக்கு விழும் விருப்பு வாக்குகள் தனக்குக் கிடைக்காது போனாலும், கட்சிக்கு இரண்டாவது ஆசனத்தைப் பெற்றுக் கொடுக்கும் என சுமந்திரன் நம்பினார்.

ஆனால் அவர் நம்பியபடி நடக்கவில்லை. ஏனென்றால் தமிழ் அரசுக் கட்சிக்கு விகிதாசார முறைப்படி ஓர் ஆசனம் மாத்திரமே யாழ்ப்பாண மாவட்டத்தில் கிடைத்தது. அதனால் அவரால் நாடாளுமன்றம் செல்ல முடியவில்லை.

அதற்குப் பின்னர் அவர் சிறிதரனை பதவியிலிருந்து விலகச் செய்து, அவரை தேசியப் பட்டியல் உறுப்பினர் ஆக்கிவிட்டு, அந்த இடத்திற்கு தான் வருவதற்கு முயன்றார்.

சிறிதரன் பதவி விலகினால், இயல்பாகவே சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி விடுவார். ஆனால் சிறிதரன் அதற்கு இணங்கவில்லை.

அடுத்து, வடக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக சிறிதரன் போட்டியிட்டால், தான் நாடாளுமன்றத்துக் குள் வர முடியும் என அவர் கனவு கண்டார்.

வடக்கு மாகாண சபை முதல்வர் பதவிக்கு போட்டியிடப் போவதில்லை என அதற்கும் சிறிதரன் ஆப்பு வைத்தார்.
இதனை கச்சிதமாகப் பிடித்துக்கொண்ட சுமந்திரன் இப்போது வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடத் தயார் என்று அறிவித்ததுடன், அதனை அவ்வப்போது உறுதிப்படுத்தி வருகிறார்.

ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் அல்லது வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருக்க வேண்டும்.



அப்படி இருந்தால்த்தான் சர்வதேச ஊடாட்டங்களைக் கவனித்துக்கொள்ள முடியும், சர்வதேசம் தன் மீது கவனம் செலுத்தும் என்பது சுமந்திரனுக்கு நன்றாகப் புரிந்து இருக்கிறது. அவரை இப்போது பெரிதாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் யாரும் அணுகுவதில்லை, அவரும் அவர்களைச் சந்திப்பதைக் குறைத்துக் கொண்டு விட்டார்.

சுமந்திரன் தற்போது தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஆகிவிட்டார். அவருக்கு ஒத்துழைக்கக் கூடிய சிவிகே சிவஞானம் பதில்த் தலைவராக இருக்கிறார்.

ஆக தமிழ் அரசுக் கட்சி இப்போது, சுமந்திரனின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது என்பது வெளிப்படை. இப்போது அங்கு யாரும் கட்சியின் நிலைப்பாடுகளுக்கு எதிராகக் கருத்துகளை வெளியிடுவதற்குக் கூட அச்சம் தோன்றியிருக்கிறது.

ஏனென்றால் சுமந்திரன் எப்படியாவது, ஏதாவது சட்ட நுணுக்கங்களைப் பயன்படுத்தி, தங்களைச் சிக்கலில் மாட்டி விடுவாரோ - கட்சியை விட்டு நீக்கி விடுவாரோ என்ற பயம், சிறிதரன் உள்ளிட்ட அனைவருக்குமே தொற்றியிருக்கிறது.

தமிழ் அரசுக் கட்சியை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள போதும், சுமந்திரனுக்கு ஏதாவது ஓர் அழுத்தமான பதவி தேவைப்படுகிறது.

அது நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியாகவோ இருக்கலாம்.

அவர் நாடாளுமன்ற உறுப்பினராக வேண்டுமானால் அதற்கு சிறிதரன் மனம் வைக்க வேண்டும், அது இப்போதைக்கு சாத்தியம் இல்லை.

அல்லது சத்தியலிங்கம் மனம் வைக்க வேண்டும். அவர் ஏற்கனவே கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை சுமந்திரனுக்காக விட்டுக் கொடுத்து ஒதுங்கியவர். மீண்டும் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்தை அவர் விட்டுக் கொடுத்து ஒதுங்கமாட்டார்.

அதைவிட சுமந்திரன் ஏற்கனவே தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டேன் என்று பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார். அதனால் அவருக்கு அந்த வழியும் இல்லை.

அடுத்த நான்கு ஆண்டுகள் அவரால் நாடாளுமன்றத்துக்குள் நுழைவதற்கு வாய்ப்புகள் மிகமிக அரிதாகவே தென்படுகின்றன. இந்நிலையில் அவருக்கு இருக்கின்ற ஒரே வாய்ப்பு, வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றுவதுதான்.

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல்களை இப்போதைக்கு நடத்துமா - இல்லையா என்ற கேள்விக்கு இன்னமும் சரியான பதில் இல்லை.

ஆனால் இதனை நீண்டகாலம் இழுத்தடிக்க முடியாது என்றே தெரிகிறது. எவ்வாறாயினும், அடுத்த ஆண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இந்நிலையில் சுமந்திரன் முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றுவதற்கான வலுவான முயற்சியை ஆரம்பித்திருக்கிறார்.

அவர் இப்போது வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் இறங்கிச் செயற்படத் தொடங்கி இருக்கிறார். அவரது அணுகுமுறைகளில் மாற்றங்கள் தென்படுகின்றன.

மிக அண்மையில் தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வுக்கு அவர் சென்று இருக்கிறார்.

பகிரங்கமாக அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்ந்த ஒரு நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்ற முதல் சந்தர்ப்பம் இது எனலாம். இதற்கு முன்னர் அவர் இவ்வாறான நிகழ்வுகளில் ஏதும் பங்கேற்றதாகத் தெரியவில்லை. அப்படியான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு களில் அவர் பங்கேற்றிருந்தாலும், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் நினைவேந்தலில் அவர் பங்கேற்றிருப்பது இதுதான் முதல் முறை.

நல்லூரில் அமைக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் வரலாற்றுக் கூடத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன், திலீபனின் உருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தி இருக்கிறார் சுமந்திரன். அதனை அவர் முகநூலில் படங்களுடன் பதிவிட்டிருந்தார்.

அவர் தன்னைப்பற்றிய மக்களின் கருத்து மாற வேண்டும் என எதிர்பார்க்கிறார்.

அவர் புலிகளுக்கு எதிரான நிலைப் பாட்டைக் கொண்டவர், போராட்டத்திற்கு விரோதமான கருத்தை வெளிப்படுத்துபவர், அரசாங்கத்துடன் இணைந்து செயல்படு பவர் என்றெல்லாம் மக்கள் மத்தியில் கருத்துகள் உள்ளன. இந்தக் கருத்து களை அவர் முறியடிக்க விரும்புகிறார். மக்கள் மத்தியில் இந்தக் கருத்துகளை உருவாக்கியவரும் அவர்தான்.

அவர் தன்னை ஒரு மாற்று அரசியல்வாதி யாக அடையாளப்படுத்த முற்பட்டார்.

மிதவாத அரசியல் செய்துகொண்டே, மாற்று அரசியலை அவர் முன்னெடுத்தார். அது அவரைத் தமிழ் தேசிய அரசியலில் வித்தியாசமான ஒருவராக அடையாளப் படுத்தியது. தமிழ் தேசிய அரசியலுக்கு அவர் விரோதமாகச் செயற்படுகிறார் என்ற சந்தேகங்களையும் ஏற்படுத்தியது. அதற்கு நியாயமான பல காரணங்களும் உள்ளன.

அந்தக் கருத்தை உருவாக்குவதில் சுமந்திரன் முக்கிய காரணியாக இருந்தார்.

ஏனென்றால் அவருக்கு அதிகம் தேவைப்பட்டது, தமிழ் மக்களின் ஆதரவு அல்ல, சிங்கள அதிகார வர்க்கத்துடனான உறவு. அந்த உறவை அவர் நன்றாகப் பேணுவதற்கு அவருக்கு இப்படி ஒரு தளம் தேவைப்பட்டது.

அதனை அவர் திட்டமிட்டு தனக்காக உருவாக்கிக் கொண்டிருந்தார். ஆனால் இப்போது அவருக்கு அந்தத் தளம் உதவப் போவதில்லை என்பது நன்றாகத் தெரிந்துவிட்டது.

தமிழ் மக்களின் ஆதரவு பெற்ற ஒரு தலைவராக இருக்க வேண்டும் என்ற அவசியம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

அந்த நிலையைத் தக்க வைத்துக் கொண்டால்த்தான் அவரது அரசியலை முன்னெடுக்க முடியும் என்ற சூழல் உருவாகியிருக்கிறது. அதனால் அவர் வேறு வழியின்றி இறங்கி வந்து தமிழ் மக்கள் முன் அரசியல் செய்ய ஆரம்பித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் நினைவேந்தலில் பங்கேற்று, தான் போராட்டத்துக்கோ புலிகள் அமைப்புக்கோ எதிரானவன் அல்ல என்ற உணர்வை மக்கள் மத்தியில் ஊட்ட ஆரம்பித்திருக்கிறார்.

இதற்கு அடிப்படைக் காரணம், வடக்கு மாகாண முதலமைச்சர் கதிரை. அதனை அடைவதற்காக அவர் தன்னை தயார்படுத்த ஆரம்பித்திருக்கிறார்.

ஆனால் அவரது இந்த முயற்சியை மக்கள் எப்படிப் பார்க்கிறார்கள்?

அவர்கள் இதனை ஏற்றுக் கொள்கிறார்களா?

வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறும் போதுதான் இதற்கான பதிலைத் தெரிந்து கொள்ள முடியும்.

Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-10-01 5:54 PM Page 7



# தமிழ்நாட்டில் மீண்டும் திமுக ஆட்சி, இரண்டாம் இடத்தில் விஜய் கட்சி – தேர்தல் 2026 கணிப்பு

## பத்திரிகையாளர் இதயா நேர்காணல்

நேர்கண்டவர்: கண்ணன்

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தைத் தொடங்கிய நடிகர் விஜய் தனது தேர்தல் பிரசார சுற்றுப் பயணத்தைத் தொடங்கியுள்ளார். மதுரை மாநாட்டைத் தொடர்ந்து திருச்சி, அரியலூர், நாகப்பட்டிணம், திருவாரூர் மாவட்டங்களில் விஜய் பிரசாரம் செய்த போது கட்டுக்கடங்காத கூட்டத்தை தாக்குபிடிக்க முடியாமல் இந்த நகரங்கள் திணறின. ஒவ்வொரு சனிக்கிழமையும் 3 மாவட்டங்கள் எனத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், விஜய்யைக் காண ஏராளமான மக்கள் கூடுவதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலால், ஒவ்வொரு சனிக்கிழமையும் 2 மாவட்டங்கள் என விஜய்யின் பிரசார திட்டம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், டிசெம்பர் 20ஆம் தேதியுடன் சுற்றுப் பயணத்தை விஜய் முடிக்க இருந்த நிலையில் அதை பெப்ரவரி 21வரை நீடிக்க உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. மட்டுமல்லாமல், இனி ஒவ்வொரு மாவட்டத்திலும் விஜய் நிறைய நேரம் பேச உள்ளதாகவும் கூறப்படுகிறது. அதற்காக விஜய்யின் பிரசார பயணம் ஞாயிற்றுக் கிழமையும் சேர்த்து அமைக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், விஜய்யின் பிரசாரத்தின் தாக்கம் என்ன? விஜய் அரசியல் கட்சி தமிழ்நாட்டில் தாக்குபிடிக்குமா? என்ற கேள்வியை முன்வைத்து, தமிழக மூத்த பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான இதயா அவர்களைச் சந்தித்தோம்.

கேள்வி: தமிழ்நாடு சட்டசபை தேர்தலுக்கான பிரசாரப் பயணத்தை நடிகர் விஜய் தொடங்கிவிட்டார். மதுரை மாநாட்டைப் போலவே திருச்சி, நாகப்பட்டிணம், கரூர் மூன்று இடங்களிலும் ஆச்சர்யப்படத்தக்க கூட்டம். இந்த கூட்டம் வாக்காக மாறினால் ஒரு பெரிய அரசியல் கட்சியாக விஜய் உருவெடுப்பார் என்று சொல்லப்படுகிறது. நீங்கள் இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

பதில்: நடிகர் விஜய் சனிக்கிழமை, சனிக்கிழமை பிரசாரம் என்று அறிவித்ததும் எல்லோரும் கிண்டல் செய்தனர். அப்போதே நான், “அது ஒன்றும் பெரிய தவறு இல்லை” என்று சொன்னேன். ஏனென்றால் ஒவ்வொரு அரசியல்வாதிக்கும் ஒரு தனித்துவம் இருக்கும். சிலர் காலையில் ஆறு முதல் பத்து வரை பிரசாரம் செய்துவிட்டு பிறகு வெயிலை தவிர்த்து பின் மாலை நான்கு முதல் பத்து என்று பிரசாரம் செய்வதை நான் பார்த்திருக்கிறேன். செல்வி ஜெயலலிதா மதியத்திற்கு மேல்தான் பிரசாரம் செய்வார். மு.க. ஸ்டாலின் அதிகாலையில் நடைப்பயிற்சி போகும் போதே பிரசாரத்தை தொடங்கிவிடுவார். சனிக்கிழமை, சனிக்கிழமை என்பது இப்போது விஜய். தேர்தலுக்கு இன்னும் எட்டு மாதங்கள் இருக்கிறது. அதனால் தெருத்தெருவாக இன்றே பிரசாரம் செல்லவேண்டிய அவசியம் இல்லை. அதிமுக எடப்பாடி தொகுதி தொகுதியாகப் போகிறார் என்பதற்காக விஜய்யும் செல்லவேண்டும் என்கிற அவசியம் இல்லை. விஜய் சனிக்கிழமை பிரசாரம் செய்வதற்கு முக்கிய காரணம் கூட்டம் அதிகமாகக் கூடும் என்பதற்காகத்தான். அவர்கள் ஏற்கனவே, “எங்கள் தலைவர் வெளியில் வந்தால் சட்ட ஒழுங்கு பிரச்சினை வரும். போக்குவரத்து இடையூறு பிரச்சினை வரும். விடுமுறை



நாட்களில் போனால் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், வேலைக்கு செல்வோர் போன்றோருக்கு தொந்தரவாக அமையும் என்று நினைத்துத்தான் சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை வைக்கிறார்” என்று கூறியிருக்கின்றனர். அவர்கள் சொல்வது போலவே நாம் இப்போது பார்க்கிறோம். திருச்சியில் விமான நிலையத்திலிருந்து பிரதான சாலைக்கு விஜய் வாகனம் வருவதற்கே முக்கால் மணி நேரம் ஆகிவிட்டது. இந்தக் கூட்டத்தை அவர் எதிர்பார்த்திருக்கிறார். மற்றவர்கள் எதிர்பார்க்கவில்லை.

கேள்வி: மற்றக் கட்சியில் உள்ளவர்கள் நீண்டகாலமாக அரசியலில் இருக்கிறவர்கள். ஆனால், விஜய்யை பொறுத்த வரையில் இதுதான் முதல் முறை. தேர்தல் குறுகிய காலம்தான் இருக்கிறது. இந்த நிலைமையில் அவர் சனிக்கிழமை தோறும் மட்டும் பிரசாரம் செய்தால் போதுமா? ஏனென்றால், இந்தக் கட்சியின் முக்கிய முகமாக அவர்தான் இருக்கிறார். அதனால் இன்னும் அதிக பயணம் செய்தால் நல்லது இல்லையா?

பதில்: மற்றவர்கள் எதிர்பார்ப்பிற்கும் விஜய் எதிர்பார்ப்பிற்கும் வித்தியாசம் இருக்கிறது. அவர் என்ன சொன்னார்: “எல்லோரும் அரசியல் கட்சி ஆரம்பித்து விட்டுத்தான் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் போனார்கள். ஆனால், நான் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் போனபிறகு தான் அரசியல் கட்சி ஆரம்பித்தேன்.” அவர் சொல்வது சரிதானே. நீங்கள் எந்த அரசியல்வாதியை எடுத்துகொண்டாலும் அவர்கள் எல்லா இடத்திற்கும் செல்ல முடியாது. ஏதாவது ஓர் இடத்தில்தான் கூட்டம் போட்டு பேசுவார்கள். மேலும், இன்று சமூக ஊடகங்கள், தொலைக் காட்சி மூலமாக எளிதாக எல்லா இடங்களுக்கும் சென்றடைந்து விடலாம். அதனால் இடைவெளி விட்டு பிரசாரம் செய்தாலே போதும். ஜெயலலிதா ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு ஓர் இடத்திற்குத்தான் செல்வார். ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஓர் இடம். அதுபோல் விஜய்யும் தன்னுடைய ரசிகர்களுக்கு இந்த மாதிரி பிரசாரம் செய்தாலே போதுமானது. அவர்கள் தனக்கு ஓட்டு போடுவார்கள் என்று நம்புகிறார்.



கேள்வி: எல்லோருடைய கணிப்பும் விஜய் கட்சிக்கு 8-10 சதவீதம், அதிகபட்சம் 15 சதவீதம் வாக்கு என்பதாக இருக்கிறது. நீங்கள் மட்டும்தான் 25 சதவீதம் வாங்குவார் என்று சொல்கிறீர்கள். எம்.ஜி.ஆருக்கு பிறகு விஜயகாந்த் உட்பட நிறைய நடிகர்கள் அரசியலுக்கு வந்திருக்கின்றனர். ஆந்திராவில் சிரஞ்சீவி, பவன்கல்யாண் உட்பட இவர்கள் யாரும் 25 சதவீதம் வாக்குகள் வாங்கியதில்லை. எப்படி நீங்கள் 25 சதவீதம் கணிக்கிறீர்கள்?

பதில்: முதலில் நானும் மற்றவர்களைப் போல விஜய் 6-10 சதவீதம் அல்லது விஜயகாந்த் அளவிற்கு வாங்கலாம் என்று தான் நினைத்திருந்தேன். ஆனால், நான் களத்திற்கு சென்று கணிப்பு நடத்திப் பார்த்தபோது 20-25 சதவீதம் வரை சில தொகுதிகளில் வருவதைப் பார்த்தேன். வேறு சில கணிப்பாளர்களின் கணிப்பிலும் விஜய்க்கு 36 சதவீதம் வரைக்கும் வருவதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால், தேர்தல் நெருங்கும்போது இது மாறவும் வாய்ப்பு உள்ளது. இன்று விஜய் முகத்திற்காக தேர்வு செய்கின்றனர். தேர்தலில் விஜய் கட்சியின் புது முகம் தெரியாத வேட்பாளர் என்று வரும்போது இது குறைய வாய்ப்பு உள்ளது. இன்னொன்று இரண்டு கட்சியும் பணம் கொடுக்கும் போது அதை விஜய் வேட்பாளரால் எதிர்கொள்ள முடியாமல் போகலாம். இரண்டு பெரிய விஜபி வேட்பாளர்கள் மோதும்போது, விஜய்யின் புது வேட்பாளர் காணாமல் போகலாம். வேட்பாளர்கள் விலை போகலாம். இந்த மாதிரி நடக்கும்போது விஜய் வாங்கும் வாக்கு சதவீதம் குறைய வாய்ப்பு இருக்கிறது. ஆனாலும், குறைந்தபட்சம் 15 சதவீதம் வாக்கு விஜய் வாங்குவார் என்று நான் எதிர்பார்க்கிறேன். சில தொகுதிகளில் விஜய் கட்சிக்கு முதல் இடம், இரண்டாம் இடம் வருவதற்குகூட வாய்ப்புகள் உள்ளது.

கேள்வி: இரண்டாம் இடம் முதல் இடம் வருவதற்குக்கூட வாய்ப்பிருக்கிறது என்று சொல்கிறீர்கள். அது எந்தெந்தத் தொகுதி என்று சொல்ல முடியுமா?

தமிழ்நாட்டில் எல்லாத் திசையிலும் எல்லாத் தொகுதிகளிலும் அது இருக்கிறது. பொதுவாக கொங்கு மண்டலத்தை அதிமுகவும் பாஜகாவும் பலமாக இருக்கிற தொகுதி என்று சொல்வார்கள். ஆனால், விஜய் அங்கேயே அதிகமாக வாக்கு வாங்குகிறார். அதேபோல் வண்ணியர், விடுதலை சிறுத்தைகள் உள்ள பகுதியில் குறைவாக இருப்பார் என்றார்கள். ஆனால், அதிகமாக வருகிறார். பாரம்பரியமாக டெல்டா பகுதி திமுக கோட்டை என்பர். ஆனால், அங்கேயும் விஜய் அதிகமாக வருகிறார். தென்மாவட்டம், கிறிஸ்துவ, முஸ்லீம் பகுதியிலும் அதிகமானவர்கள் விஜய்க்கு வாக்களிக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள்.

கேள்வி: எந்தெந்த வயதினர்?

பதில்: 35 வயதுக்கு உட்பட்டவர்கள் அதிகமாக உள்ளனர். திமுக, அதிமுக பழைய கட்சி. அப்பா, தாத்தா கால கட்சி. எனவே புதிய ஒருவர் வரட்டும் என விரும்புகின்றனர். அதுபோல் பெண்கள் விஜய் மேல் விருப்பம் தாண்டி, ஒரு மாறுதல் வேண்டும் என நினைக்கின்றனர். கிராமப்புறத்தைவிட நகர்ப்புற பெண்கள் அதிகமாக விஜய்யை விரும்புகின்றனர். பெண்களுக்கு திமுக நிறைய திட்டங்கள் வகுத்திருக்கிறது. அதனால் திமுகவிற்கு பெண்கள் ஓட்டு அதிகரித்திருக்கிறது. தமிழ் புதல்வன், புதுமைப்பெண், உரிமைத்தொகை, இலவச பேருந்து போன்ற திட்டங்களால் பெண்கள் ஓட்டு அதிகம் திமுக பெறும். மற்றக் கட்சிகளின் பெண்கள் ஓட்டு விஜய் பக்கம் திரும்பும்.

கேள்வி: எந்தெந்த கட்சியின் ஓட்டுகள் விஜய்க்கு போக வாய்ப்புள்ளது?

எல்லாத் தொகுதியிலிருந்தும் எல்லாக் கட்சிகளில் இருந்தும் விஜய்க்கு ஓட்டுகள் வருகிறது. திமுக வாக்குகளைப் பிரிக்கிறார். அதிமுகவை அதிகமாகப் பிரிக்கிறார். சீமானைப் பிரிக்கிறார். விடுதலைச் சிறுத்தைகளைப் பிரிக்கிறார். பாமகாவைப் பிரிக்கிறார். தேமுதிகாவைப் பிரிக்கிறார். அதிமுகா ஓட்டுத்தான் தனக்கு வருகிறது என்பதைப் புரிந்துதான் அண்ணா, எம்ஜிஆர் படத்தையும் தொட்டு வைத்துள்ளார், விஜய்.

கேள்வி: சீமான் ஓட்டைப் பிரிப்பார் என்று சொன்னீர்கள். இதனால்தானோ என்னமோ சீமானின் நாம் தமிழர் கட்சியினருக்கும் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் கட்சியினருக்கும் இடையே ஒரு மோதல் போக்கு உருவாகியிருக்கிறது. இதை எப்படி பார்க்கிறீர்கள்?

அடுத்த இதழில் முடியும்...



சொல்லிக் கொண்டு வருவது பிறப்பு...
சொல்லாமல் வருவது இறப்பு...
இடையில் சிரித்துக்கொண்டே
வாழ்வதுதான் சிறப்பு...

Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-10-01 5:54 PM Page 8



## நாமும் நமது இல்லமும் 686

# ரொறொன்ரோவில் 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு புதிய வீடுகளின் விற்பனையில் சரிவு



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ரொறொன்ரோ பெரும்பாகத்தின் பகுதியின் (GTA) வீட்டுச் சந்தை கடுமையான மந்தநிலையைச் சந்தித்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு புதிய வீடுகளின் விற்பனை குறைந்துள்ள தாக தரவுகள் தெரிவிக்கின்றன.

2025இல் ஒகஸ்ற் மாதத்தில் GTA முழுவதிலும் 300 புதிய வீடுகள் மட்டுமே விற்கப்பட்டன. இது கடந்த ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் 42% சரிவு. மேலும் கடந்த 10 ஆண்டுகளின் சராசரியுடன் ஒப்பிடுகையில் 81% குறைவு. அடுக்குமனைகளின் (கொண்டோ) விற்பனைகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஒகஸ்ற் மாதத்தில் வெறும் 118 மனைகளின் அலகுகள் (Units) மட்டுமே விற்கப்பட்டுள்ளன. இது வரலாற்று சராசரியைவிட 90% குறைவாகும்.

இதேவேளை GTAஇல் 22,245 விற்கப்படாத புதிய ஆதனங்கள் விற்பனைக்காக இருக்கின்றன. இதில் சுமார் மூன்றில் நான்கு பங்கு (16,447 Units) கொண்டோக்களே ஆகும்.



இதனால் கட்டுமானத் துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. ஒகஸ்ற் 2025, மாதத்தில் புதிய வீடுகள் கட்டத் தொடங்கிய எண்ணிக்கை 16% குறைந்தது. இது 2025ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து மிகப்பெரிய மாதாந்தர சரிவாகும். மேலும் கடந்த ஆறுமாத சராசரியை விடவும் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாகும்.

இந்த நிலைமை குறித்து கட்டுமானம் மற்றும் நில மேம்பாட்டுசங்கம் (BILD – Building Industry and Land Develop ment) எச்சரிக்கை விடுத்துள்ளது.

நிர்மாணிப்பதற்கு முன்னர் (Pre-Construction) விற்பனைகள் தொடர்ச்சி யாகக் குறைந்து வருவதால், எதிர்காலத்தில் வீட்டுத் தட்டுப்பாடு உருவாகும் அபாயம் உள்ளது. ஏற்கனவே விலை அதிகம் என்பதால் வாங்காமல் பலர் காலம் தள்ளுகின்றனர். மூன்று வருடத்தில் ஏற்படப்போகும் ஆதனத் தட்டுப்பாடு விலையை மேலும் உயர்த்தும். இதன் விளைவாக, நகரத்தில் கட்டிடத்திற்கான குறைவான கிரேன்கள் (Cranes) மட்டுமே காணப்படுகின்றது. "பல தொழிலாளர்கள் வேலை இழப்பைச் சந்திக்க நேரிடும் பல திட்டங்கள் பாதியிலேயே நிறுத்தப்படும் அபாயமும் உள்ளது" என BILD சங்கம் தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2025 ஆண்டின் இன்றைய காலப்பகுதிவரை, அடமானக்கடன் செலுத்தாததால் நிதி நிறுவனங்கள் ஆதனங்களை கையகப் படுத்தி விற்பனை செய்கின்றன. (Power of Sale) கடந்த வருடத்தைவிட 59% அதிகரித்துள்ளது. இதில் 38% Power of Sale ரொறொன்ரோ பகுதியில் உள்ள ஆதனங்களாகும்.

2009ஆம் ஆண்டில் மொத்தமாக Power of Saleஇனால் விற்கப்பட்ட ஆதனங்கள் 158,441. ஆனால் 2025இன் முதல் ஏழு (7) மாதங்களில் 84,610 ஆதனங்கள் Power of Saleஇனால் விற்கப்படுகின்றன.

இந்நிலைமை மேலும் மோசமாகலாம் என்றே தெரிகின்றது.

இந்த நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர மத்திய அரசு புதிய கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

குறிப்பு
செப்ரெம்பர் 17, 2025 அன்று கனடிய மத்திய வங்கி தனது வட்டி வீதத்தை 0.25%இனால் குறைத்துள்ளது.
கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 2.5%
முதன்மை வட்டி வீதம் 4.70%

# தனித்தமிழ் இயக்கத்தின் முன்னோடி

## தவத்திரு மறைமலை அடிகள் (ஜலை 15, 1876 – செப்ரெம்பர் 15, 1950)

துங்கமுக ஐங்கரனின் பாத பங்கயம்
துணையெனவே மெய்யான துய்யனாய் நித்தம்
எங்குந்தமிழ் எதிலுந்தமிழ் என்று முழங்கி
இயற்கைதனை எய்தும்வரை அயர்ச்சி இன்றி
தங்கத்தமிழ் மொழிதனிலே பிறமொழிக் கலப்போ
தகாதென்று போராடி வெற்றி கண்டு
மங்காத புகழுடனே வாழ்ந்த பெரியார்
மறைமலையெனும் பெயர்கொண்ட அடிகளார் அன்றோ?

இயற்பெயராய்ப் பெற்றோர்கள் வேதா சலமென
இட்டதையே தமிழாக்கி மறைமலை எனவே
தயக்கமின்றி மாற்றியதொடு தனித்தமிழ் இயக்கம்
தாயகத்தில் மலர்வதற்கு வித்தும் இட்டார்
மயக்கமுற்றோர் இந்திமொழிக்(கு) ஆதர வளிக்க
மதயானை போலெதிர்த்துச் சிறைக்குஞ் சென்றார்!
வியக்கவைக்குஞ் செயலெனவே இயற்கை உணவை
வேகமாகப் பரப்புவதில் தாகங் கொண்டார்!.

தனித்தமிழே அவர்வாழ்வின் மூச்சாய்ப் பேச்சாய்த்
தாரகமந் திரமாகித் தனித்தமிழி யக்கமாய்
மனித்தப்பி றவியெடுத்துப் பிறந்த தற்கு
மகத்தான பணியிதெனத் தூய தமிழதன்
புனிதமென்றும் மங்காதிருக்க வழிச மைத்தார்!
புதல்வர்க்குக் கலப்பில்லாப் பெயர்கள் சூட்டி
குனித்தபிறை சூடியேதனித் தெய்வ மென்று
குவலயத்தோர் கும்பிடவும் வேண்டி நின்றார்!

கைப்பிடித்த கயல்விழியாள் சவுந்திர வல்லியைக்
கலந்தாறு பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தார்!
செப்பமுடன் சித்தாந்தத் தீபிகை என்னும்
செந்தமிழிதழ் ஆசிரியராய்த் தொடர்ந்(து) அதிலே
ஒப்பரிய சித்தாந்தக் கருத்தை யெல்லாம்
ஓரைந்து கட்டுரையில் எழுதி வைத்தார்
செப்பமுடன் சமரசசன் மார்க்க மென்னும்
சீரியநற் சங்கமொன்றைச் சிறப்புற அமைத்தார்!.

பொதுநிலைக் கழகமென்றதற்குத் தனித் தமிழில்
புதியதொரு பெயரிட்டு வளர்த்து வந்தார்
எதுசிறந்த தெனவகுத்து நூல்க ளாக்க
எற்றம்மிகு ஆக்கங்களைச் சேக ரித்து
விதுப்புடனே திருமுருகன் அச்ச கத்தை
வேகமாகத் தாபித்து நூல்கள் பதித்த
சதுரராகத் திகழ்ந்ததுடன் மணிமொழி என்னும்
சகலநூலகம் நிறுவிச்சா தனையும் புரிந்தார்!

திருநெறிய தேன்தமிழின் தேசுடன் வனப்பும்
திரிபடைந்து குன்றாது என்றும் மாறாப்
பருவமொடு கன்னியென் றிலங்கப் பாவலர்
பாங்கறிந்து பாடிமகிழ் வெய்த வெண்ணி
அருவருக்குஞ் செயலெனவே பிறமொழி கலக்கும்
அற்பர்செயல் தடுத்திடவே தனித்தமிழ் இயக்கம்
பெருமனத்தோன் மறைமலையார் பிறக்கச் செய்தார்.
பேறெனவே தமிழுலகம் போற்று தம்மா!

தன்மானங் குன்றிடாத ஆசிரி யராகித்
தனித்தமிழ் இயக்கத்தை மாணவர் மனதில்
வன்னிப்பாய்ப் பதியவைத்து வாகர னாகி
வாஞ்சையொடு மலரவிட்டார்! வளமான பேச்சால்
தென்னரசர் வளர்த்தமைபோற் சீர்மை செய்து
செந்தமிழுக்(கு) அரணம்போல் விளங்கிய தோடு
மன்னுசைவ நெறியெங்கும் மிகுந்தே ஓங்க
மாதவத்து அடிகளாகி விளங்கிப் போந்தார்!




வேதாசலம் = வேதம்-மறை
அசலம்-மலை = மறைமலை
சீர்மை - செம்மை
தென்னரசர் - பாண்டிய மன்னர்கள்
அரணம் _ காவல் வேலி
குனித்தபிறை சூடி _ சிவபெருமான்
விதுப்பு - ஆசை
சதுரர் _ அறிஞர்
வன்னிப்பாய் - சிறப்பாக்
வாகர னாகி - வீரனாகி



பல்வைத்திய கலாநிதி
இளமுருகனார் பாரதி

# நகரசபை இடைத்தேர்தல் முடிவுகள்

Scarborough - Rouge Park (வட்டாரம் 25)இற்கான ரொறொன்ரோ நகரசபை உறுப்பினராக இருந்த Jennifer Mckelvie கடந்த கனடிய மத்திய அரசிற்காக நடைபெற்ற பொதுத்தேர்தலில் லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பின ராகத் தெரிவு செய்யப்பட்டபடியால் அவரது ரொறொன்ரோ நகர சபைக்கான பதவி வெற்றிடமானது. அதற்கான இடைத் தேர்தல் செப்ரெம்பர் 29, 2025இல் நடைபெற்றது. அதில் நீதன் சண், அனு ஸ்ரீஸ்கந்தராஜா, சோண் சின்னராஜா, அனித்தா அனந்தராஜன் உட்பட 20 பேர் போட்டியிட்டனர்.

தேர்தல் முடிவுகளின்படி நீதன் சண் 5,174 (26.86%) வாக்குகளைப் பெற்று ரொறொன்ரோ நகரசபைக்கான வட்டாரம் 25இன் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வாக்களிக்க தகுதியானவர்களில் 24,9% ஆனோரே இந்த இடைத்தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

நீதன் சண் நீண்டகாலாக அரசியலில் ஈடுபட்டு வருகிறார். அவர் 2006ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை அறங் காவலராக (School Trustee) பலமுறை பங்காற்றியுள்ளார். முதலில் யோர்க் பிராந்திய மாவட்ட பாடசாலை வாரியத்திற்கும், (YRDSB) பின்னர் ரொறொன்ரோ மாவட்ட பாடசாலை வாரியத்திற்கும் (TDSB) பணியாற்றி உள்ளார். TDSBஇல் நீதன் சண் கடந்த ஒரு வருடமாகத் தலைவராக இருக்கிறார். 2017ஆம் ஆண்டில் தற்போது மறுமாவட்ட மாகப் பிரிக்கப்பட்ட Scarborough - Rouge River வட்டார உறுப்பினராக வெற்றி பெற்றிருந்தார். பின்னர் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற பொது நகராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் Jennifer


Neethan Shan Wins Scarborough–Rouge Park By-Election

Mckelvieஇடம் தோல்வியடைந்தார். நீதன் சண் முன்னர் ஒன்றாரியோ மாகாணத்திற் கான சட்டமன்றத் தேர்தலிலும் புதிய ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டுள்ளார். இடதுசாரி சார்பு அரசியலுக்காக தமது ஆதரவைத் தெரிவிக்கும் Progress Toronto அமைப்பு நீதன் சண்இற்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தது. நீதன் சண் ரொறொன்ரோ பல்கலைக்கழக விஞ்ஞானமானி பட்டதாரியாவார்.

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம்(%) |
|---|---|---|
| Neethan Shan | 5,174 | 26.86 |
| Anu Sriskandarajah | 3,374 | 17.52 |
| Shawn Allen | 2,934 | 15.23 |
| Reza Khoshdel | 1,834 | 9.52 |
| Zakir Patel | 1,521 | 7.90 |
| Shean Sinnarajah | 1,441 | 7.48 |
| Darrell Brown | 601 | 3.12 |
| Anita Anandarajan | 507 | 2.63 |
| Brian Matthews | 397 | 2.06 |
| Dianna Robinson | 377 | 1.96 |
| Zia Choudhary | 295 | 1.53 |
| Ashan Fernando | 182 | 0.94 |
| Jamil Kerr | 176 | 0.91 |
| Jose Moreno Garcia | 154 | 0.80 |
| Walter Alvarez-Bardales | 101 | 0.52 |
| Donna LaRush | 59 | 0.31 |
| Shemar Shirley | 40 | 0.21 |
| Huy Lieu | 35 | 0.18 |
| Gregory Rodriguez | 35 | 0.18 |
| Kevin Cheatley | 23 | 0.12 |

மார்க்கம் நகரசபை 7ஆம் வட்டாரம் உறுப்பினராக இருந்த Juanita Nathan கடந்த கனடிய மத்திய அரசிற்கான நடைபெற்ற பொதுத்தேர்தலில் லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டபடியால் அவரது மார்க்கம் நகரசபைக்கான பதவி வெற்றிடம் ஆனது. அதற்கான இடைத்தேர்தல் செப்ரெம்பர் 29, 2025இல் நடைபெற்றது. அதில் கிள்ளி செல்லையா, ஆரணி

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம்(%) |
|---|---|---|
| Nimisha Patel | 2,954 | 36.09 |
| Killi Chelliah | 2,098 | 25.63 |
| Aranee Murugananthan | 2,055 | 25.11 |
| Jenny Chen | 699 | 8.54 |
| Vicky McGrath | 141 | 1.72 |
| Kristian Chan | 120 | 1.46 |
| Abdul Samad Katawazy | 65 | 0.79 |
| Omar Ullah | 51 | 0.62 |

முருகானந்தனன் உட்பட 8 பேர் போட்டியிட்டனர்.

தேர்தல் முடிவுகளின்படி Nimisha Patel, 2,954 (36.1%) வாக்குகளைப் பெற்று மார்க்கம் நகரசபைக்கான வட்டாரம் 7இன் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கிள்ளியும், ஆரணியும் முறையே 2ஆம் மற்றும் 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர். வாக்களிக்க தகுதியானவர்களில் 22.36% ஆனோரோ இந்த இடைத்தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

## ஓர் ஆண்டு...

4ஆம் பக்கத்தொடர்ச்சி

இவர்கள் இதனை எப்படிச் சம்பாதித்தனர்?

ஜேவிபி சார்பில் நாடாளுமன்ற அல்லது மாகாண சபை அல்லது உள்ளூராட்சி உறுப்பினராக இருந்தவர்கள், பெற்றுக் கொள்ளுகின்ற அனைத்து ஊதியம் உள்ளிட்ட அனைத்துக் கொடுப்பனவுகளையும் கட்சிக்கே கொடுத்துவிட வேண்டும் என்பதுதான் விதிமுறை.

கட்சிதான் அவர்களுக்கு குடும்பச் செலவுக்கு பணத்தைக் கொடுக்கிறது.

அப்படியானால் எப்படி இவர்களால் தனிப்பட்ட முறையில் இந்தளவுக்கு சொத்துகளை சேர்த்துக் கொள்ள முடிந்தது?

இவர்கள் முழுநேர அரசியல்வாதியாகவே இருந்திருக்கின்றனர். தனியான தொழில் செய்திருக்கவில்லை.

அப்படி இருந்தும் இவர்களால் கோடிக் கணக்கில் சம்பாதிக்க முடிந்திருக்கிறது என்றால், அதற்கு குறுக்கு வழிகள் ஏதும் இருந்திருக்காமலா போகும்?

இந்த விவகாரம் அரசாங்கத்துக்கு இருந்த மதிப்பை அசைத்துப் பார்க்கத் தொடங்கியிருக்கிறது.

ஓராண்டு பூர்த்தியைக் கொண்டாடுகின்ற நிலையில் அரசாங்கத்துக்கு எதிராக அரசாங்கம் தொடர்பான விமர்சனங்கள் தீவிரம் பெற்றிருக்கின்றன.



ஒரு பக்கம் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

இன்னொரு பக்கம் மக்கள் மத்தியில் போட்ட வேடம் கலைந்திருக்கிறது.

மற்றொரு பக்கம் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவதற்கு முயன்றுகொண்டு இருக்கின்றன.

ஆக எல்லாப் பக்கங்களிலும் அரசாங்கத்தை நெருக்கடிகள் சூழ ஆரம்பித்திருக்கின்றன.

இப்படியான நிலையில் அவர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபடாமல் இருந்தது தான் புத்திசாலித்தனம்.







Vlambaram -OCTOBER 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-10-01 5:54 PM Page 10



# நானிலம் போற்றும் நட்பு - 74



- அகணி -
authorakani@gmail.com

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ளவற்றில் ஒன்றான கைந்நிலை நூலில் புலவர் புல்லங்காடனார் எழுதியுள்ள பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துகளைக் கடந்த இரண்டு இதழ்களில் உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையின் உதவியோடு உரையாடினோம். இந்த நூலில் உள்ள மேலும் சில பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துகள் பற்றி உரையாடுவோம்.

மேலும் சில பாடல்கள் பாலைத்திணையில் தலைவி, தலைவன், தோழி இடையேயான உரையாடல்களை எடுத்தியம்புகின்றன. இப்பொழுது பாடல் 23இனைக் கவனிப்போம்.

“சிலை ஒலி வெங் கணையர், சிந்தியா நெஞ்சின்
கொலை புரி வில்லொடு கூற்றுப்போல், ஓடும்
இலை ஒலி வெங் கானத்து, இப் பருவம் சென்றார்
தொலைவு இலர்கொல் - தோழி! - நமர்?”.

சிலை என்றால் வில் என்றும், கூற்று என்றால் எமன் என்றும் உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

“நாணேற்றிய வில்லுடனும் அம்புகளுடனும் கூடிய வேடர்கள் எவற்றைப் பற்றியும் சிந்திக்காது கொல்லும் தொழிலில் நாட்டங்கொண்டு கொலைபுரி வில்லோடு எமனைப்போல செல்லும் வெப்பமிக்க காட்டின் வழியாக இவ் வேனிற் காலத்தில் நம்மைப் பிரிந்து சென்ற நம் தலைவர் தளர்ச்சியுற்றவராக இருப்பாரோ” என்று தோழியிடம் தலைவி வினவினாள்”.

இந்தப் பாடலில் தலைவி தனது உள்ளத்தில் எழுந்த சந்தேகத்திற்கு விடை காண தோழியின் உதவியை நாடுகின்றாள். சிறந்த நட்பிற்கு இதுவும் அரிய எடுத்துக்காட்டேயாகும். இப்பொழுது பாடல் 24இனைக் கவனிப்போம்.

“வெஞ் சுரம் தேர் ஓட வெஃகி நின்று, அத்த மாச்
சிந்தையால் நீர் என்று செத்து, தவா ஓடும்
பண்பு இல் அருஞ் சுரம் என்பவால் - ஆய்தொடி! -
நண்பு இலார் சென்ற நெறி”.

தேர் என்றால் கானல் என்று உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

“அழகான வளையலையணிந்த தோழியே! கொடிய பாலை நிலக் காட்டில் தேர் ஓடும், நீரைத் தேடி நீங்காது ஓடுகின்ற மான்கள் வாழும். அத்தகைய பயனற்ற கொடிய காடே நம் மீது நட்பு இல்லாத நம் தலைவர் சென்ற வழி” என்று தலைவி கூறினாள்”. இந்தப் பாடலில் தலைவி தனது பிரிவுத் துயரத்தையும், பிரிவிற்குக் காரணமான தலைவன் மீதுள்ள கோபத்தையும் வெளிக்காட்டுகிறாள்.

முல்லைத்திணையில் நடைபெறும் உரையாடல்களைக் கவனிப்போம். பிரிவாற்றாமையால் வருந்திய தலைவிக்குக் கார்ப்பருவம் காட்டி வருவர் எனத் தோழி வற்புறுத்தியது. இப்பொழுது பாடல் 25இனைக் கவனிப்போம்.

“கார் செய் புறவில் கவினிக் கொடி முல்லை
கூர் எயிறு ஈன, குருந்து அரும்ப, ஒரும்
வருவர் நம் காதலர் - வாள் தடங் கண்ணாய்!-
பருவரல், பைதல் நோய் கொண்டு!”

எயிறு என்றால் பல் என்றும், பைதல் என்றால் பசலை என்றும் உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

“ஒளியையுடைய அழகிய கண்களை உடையவளே! மழை பெய்கிறது, முல்லை மலர்கிறது, குருந்த மரங்கள் அரும்புகளை தோற்றுவித்தன. எனவே நம் காதலர் வருவார். ஆதலினால் பசலை நோய் பெற்று வருந்தற்க” என்று தலைவியிடம் தோழி கூறினாள்.

இந்தப் பாடலில் பிரிவாற்றாமையால் வருந்திய தலைவிக்குக் கார்ப்பருவம் காட்டி தலைவன் வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள். இப்பொழுது பாடல் 36இனைக் கவனிப்போம்.

“பிடவம் குருந்தொடு பிண்டி மலர,
மடவ மயில் கூவ, மந்தி மா கூர, -
தட மலர்க் கோதையாய்! - தங்கார் வருவர்,
இடபம் எனக் கொண்டு, தாம்’.

பிண்டி என்றால் அசோகு என்றும், மா என்றால் விலங்கு என்றும் உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

“பெருமையுடைய மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை அணிந்தவளே! பிடவஞ் செடியும் குருந்த மரமும் அசோகமரமும் மலர்ந்து விளங்க, இளமையான மயில் நடனமாடி அகவ, குரங்குகளும் ஏனைய விலங்குகளும் குளிரால் நடுங்க நம் தலைவர் ஒரு காளை என எண்ணி வருவார். ஒரு பொழுதும் தங்கார்” என்று தோழி கூறினாள்”.

இந்தப் பாடலில் தோழியிடம் தனது தலைவன் எப்படியும் வருவான் எனத் தனது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறாள். இப்பொழுது பாடல் 39இனைக் கவனிப்போம்.

“முட்ட முது நீர் அடை கரை மேய்ந்து எழுந்து,
தொட்ட வரி வரால் பாயும் புனல் ஊரன்
கட்டு அலர் கண்ணிப் புதல்வனைக் கொண்டு, எம் இல்
சுட்டி அலைய வரும்”.

முட்ட என்றால் முழுவதும் என்றும், தொட்ட என்றால் தோண்டிய என்றும் உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

“பதிக்கப்பட்டன போன்ற வரிகளையுடைய வரால் மீன்கள், பழமையான நீர் மோதும் கரை முழுவதும் திரிந்து இரைகளை உண்டு எழுந்து நீரினுள் பாயும் மருத நிலத் தலைவன், மலர் மாலையை அணிந்த எம் புதல்வனை அவனுடைய நெற்றிச் சுட்டி அசையும்படி எம் இல்லத்திற்கு எடுத்துக்கொண்டு வருகின்றான்” என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

தலைவன் வருகை கண்டு மகிழ்ச்சியுடன் தலைவிக்கு தோழி கூறியது பற்றிய பாடல். இப்பொழுது பாடல் 40இனைக் கவனிப்போம்.

“தாரா இரியும் தகை வயல் ஊரனை
வாரான் எனினும், ‘வரும்’ என்று, சேரி
புலப்படும் சொல்லும், இப் பூங் கொடி அன்னாள்
கலப்புஅடும் கூடும்கொல் மற்று?”.

> "True friendship is a plant of slow growth"
> – George Washington-

தகை என்றால் அழகு என்று உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

“அழகுமிக்க வயல்களை உடைய மருதநிலத் தலைதலைவனை வராதே என்றாலும் வருகின்றான் என்று பரத்தையர் கூறுவது தலைவி யின் நலத்தைக் கெடுக்கின்றது” என்று பாங்கனிடம் தோழி கூறினாள். தலைவியின் மீது அக்கறை கொண்டு தோழி பாங்கனிடம் கூறுவது பற்றிய பாடல் இது.

நெய்தல் திணையில் நடைபெறும் உரையாடல்களைக் கவனிப்போம். இப்பொழுது பாடல் 49இனைக் கவனிப்போம்.

“நாவாய் வழங்கு நளி திரைத் தண் கடலுள்
ஓவா கலந்து ஆர்க்கும் ஒல்லென் இறாக்குப்பை!
பா ஆர் அம் சேர்ப்பற்கு உரையாய் - பரியாது,
நோயால் நுணுகியவாறு”.

திரை என்றால் அலை என்றும், நாவாய் என்றால் படகு என்றும் உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளார். “படகுகள் ஓடும் குளிர்ந்த அலைகளை உடைய கடலில் இறால் மீன்கள் ஆர்த்து ஒலிக்கும். பரந்த கடலை உடைய எம் தலைவனிடம் பிரிவாகிய பொறுக்க முடியாத நோயினால் நான் மெலிந்து போயுள்ளேன் என்று தலைவனிடம் கூறுவாயாக” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

தலைவி தனது பிரிவுத்துயரத்தை தலைவனிடம் எடுத்துக் கூறுமாறு கேட்கின்றாள். இப்பொழுது பாடல் 53இனைக் கவனிப்போம்.

“அலவன் வழங்கும் அடும்பு இவர் எக்கர்
நிலவு நெடுங் கானல் நீடார் துறந்தார்
